# 76. THIRUNAVAI



| | |
|---|---|
| PLACE | THIRUNAVAI |
| PRESENT NAME | THIRUNAVAI |
| BASE TOWN | EDAKKULAM |
| DISTANCE | 2 KM |
| MOOLAVAR | NAVAIMUKUNDHAN |
| THIRUKKOLAM | NINDRA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | |
| THAYAR | MALARMANGAI NACHIYAR |
| MANGALASASANAM | 13 PAASURAMS |
| PRATYAKSHAM | LAKSHMI,GAJENDRAN |
| THEERTHAM | SENGAMALA SARAS |
| VIMANAM | VEDA VIMANAM |
| NAMAVALI | Sri Padmavathi nayiga sameda Sri Narayana parabramane namaha |



முன்னொரு காலத்தில் மகாலட்சுமியும், கஜேந்திரனும் தாமரைப்பூக்களை பறித்து பெருமாளை பூஜித்து வந்தனர். இதில் ஒருமுறை கஜேந்திரனுக்கு அர்ச்சனை செய்வதற்கு பூக்கள் கிடைக்காமல் போனது. இதனால் வருத்தமடைந்த கஜேந்திரன் பெருமாளின் தனது நிலையை கூறி வருத்தப்பட்டான். உடனே பெருமாள் லட்சுமியை தேவியை அழைத்து இனிமேல் பூப்பறிக்க வேண்டாம் கஜேந்திரனுக்காக விட்டுக்கொடு என்று கூறினார். லட்சுமியும் அதன்படி செய்தாள். இதனால் மகிழ்ந்த கஜேந்திரன் தினமும் ஏராளமான பூக்களைப்பறித்து பெருமாளை அர்ச்சித்து வந்தான். பூஜையின் போது பெருமாள், லட்சுமி தேவியை தன்னுடன் ஏக சிம்மாசனத்தில் அமரச்செய்து கஜேந்திரனின் பூஜையை ஏற்று தரிசனம் தந்ததாக புராண வரலாறு கூறுகிறது. கேரளாவில் இந்த தலத்தில் மட்டும் தான் லட்சுமிக்கு தனி சன்னதி உண்டு என்கிறார்கள்.

# 76. THIRUNAVAI

ஒரு முறை 9 யோகிகள் சேர்ந்து பெருமாளை நினைத்து தவம் செய்துள்ளனர். எனவே இத்தலம் நவயோகிகள் ஸ்தலம் என அழைக்கப்பட்டது. இதுவே காலப்போக்கில் "நாவாய் ஸ்தலம்' ஆனது. இதை தற்போது "திருநாவாய்' என அழைக்கிறார்கள்.

இத்தலபெருமாள் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இவருக்கு மேலே உள்ள விமானம் வேத விமானம் எனப்படுகிறது. இவரை லட்சுமி, கஜேந்திரன், நவயோகிகள் தரிசனம் செய்துள்ளனர்.

காசியில் நடப்பதை போல இத்தலத்தில் ஏராளமானவர்கள் முன்னோர்களுக்கு பித்ரு தர்ப்பணம் கொடுக்கிறார்கள். கேரள மாநிலத்தில் பித்ரு தர்ப்பணம் கொடுப்பதில் இத்தலம் முதன்மை வகிக்கிறது. கோயிலின் சுற்றுப்பகுதியில் கணபதி, லட்சுமி, ஐயப்பனுக்கு சன்னதிகள் உண்டு. கோயிலுக்கு எதிரே உள்ள ஆற்றின் அக்கரையில் பிரம்மனுக்கும், சிவனுக்கும் தனி கோயில் உள்ளது. எனவே இத்தலத்தை மும்மூர்த்தி என அழைக்கிறார்கள்.

மிகப்பழமையான இக்கோயிலின் உட்புற சுவர்களில் காலத்தினால் அழியாத பல ஓவியங்கள் இன்றும் உள்ளன.

திருமங்கையாழ்வார் தமது பாசுரங்களில் இத்தலத்தை திருக்கோட்டியூருக்கும், திருநறையூருக்கும் ஒப்பிட்டு மங்களாசாசனம் செய்துள்ளார். கேரளாவில் இந்த தலத்தில் மட்டும் தான் லட்சுமிக்கு தனி சன்னதி உண்டு என்கிறார்கள்.

**Specials:**

The specialty of this sthalam is the thaayar Periya Pirattiyar Lakshmi devi are in a separate sannadhi and it is one of the specialty among the Malayala Naatu Divyadesam

**Sthlapuranam :**

The sthala perumal, Naavaay Mugundhan is in Nindra Thirukkolam along shore of Bharathappuzhai river. The specialty of this sthalam is the thaayar Periya Pirattiyar Lakshmi devi is in a separate sannadhi and it is one of the specialty among the Malayala Naatu Divyadesam.

Opposite to the Bharathappuzhai river, a separate temple for Lord Shivan and Brahma devan are found. So, we can get the seva of all the Tri-Moorthies in this Thiru Naavaay divya desam.

The piratti, Lakshmi devi and Gajendran (the elephant) worshipped the perumal and dedicated him with the Lotus flowers from the Lake. But, Lakshmi devi was jealous and angry on the Gajendran since he also dedicate the flowers to his perumal, who thinks that the perumal is only for him. But, perumal who can know all about this, wanted to make clear to his wife, Lakshmi devi that she is wrong.

Lakshmi devi daily plucked, all the flowers from the pond before its being plucked by Gajendran, the elephant. Seeing the action of Lakshmi piratti, Gajendran felt sad and worried for it. It cried for this and prayed to the perumal. Hearing the voice of Gajendran, the perumal ordered Lakshmi piratti not to dedicate the flowers that is plucked from the pond and instead she has to sit beside him and should accept the flowers that's being dedicated by Gajendran. Accepting the words of the perumal, Lakshmi piratti seated along with the Naavaay perumal and accepted the flowers of Gajendran.

# 76. THIRUNAVAI



By performing this Leelai (action of the perumal), the perumal explains that all the aathmaas in the world should be taken care of. And at the same time, if anyone doesn't give respect (or) interferes on the bhakti dedication towards him, they should be taught with a lesson and thereby making them to understand their fault. Like-wise only, the perumal gives the respect for the bhakti of Gajendran and at the same time he teaches a lesson for Lakshmi Piratti by making her to accept the bhakti of Gajendran.

In this sthalam, the perumal Naavaay perumal is treated as the father, Lakshmi piratti as mother and Gajendran is treated as their son. Thus, this sthalam explains the relationship between the perumal (father) and Lakshmi (mother) and between the perumal (father) and Gajendran (son).

Since, the thaayar, Lakshmi piratti doesn't want Gajendran to dedicate the Lotus flowers (Malar), the thaayar is named as "Malar Mangai Naachiyaar".

This sthala perumal also gave prathyaksham for Nava yogi. The Nava yogis are Sathuvanathar, Saaloga nathar, Aadhinathar, Arulithanathar, Madhanga Nathar, Macchendira Nathar, Kadayanthira Nathar, Korakkanathar and Kukkudanathar. They are so great and are capable of doing lots of Yaagams. Since, because of this, this sthalam is also called as "Thirunavayogi". And as the time passed, the name Thirunavayogi is changed to "Thirunaavaay".

# 76. THIRUNAVAI



**BARATHA PUZHA RIVER**

Since, the perumal is also found with Lord Shivan, this sthalam is said to equal with Kasi.

**Moolavar:**

The Moolavar of this sthalam is Naavaay Mukundhan. Also named as "Narayanan". Moolavar is found in Nindra Thirukkolam facing his Thirumugham towards East direction. Prathyaksham for Lakshmi, Gajendran and Nava yogis.

**Thayaar**

The Thaayar of this temple is Malar Mangai Naachiyaar. She is also named as "Sirudevi".

**Mangalasasanam:**

Nammalwar - 11 Paasurams.

Thirumangai Alwar - 2 Paasurams.

**Total 13.**

**Pushkarani:**

# 76. THIRUNAVAI

The pushkarani is named as "Sengamala Saras". Since the pushkarani is found full of Senthaamarai (Lotus), it is named so.

**Vimanam:**
Veda vimaanam. Since, the sthala perumal is worshipped by Nava yogis and they are said to great in their Vedic Knowledge, the vimaanam is named as "Veda Vimaanam".

| திவ்யதேசம் 076<br>திருநாவாய் (திருநாவாய்) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1520,1856 |
| நம்மாழ்வார் | 3634_3644 |
| மொத்த பாசுரங்கள் | 13 |

**திருமங்கையாழ்வார்**

1520 தூ வாய புள் ஊர்ந்து வந்து துறை வேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானை
தேவாதிதேவனை செங் கமலக் கண்ணானை
நாவாய் உளானை நறையூரில் கண்டேனே (3)

1856 கம்ப மா களிறு அஞ்சிக் கலங்க ஓர்
கொம்பு கொண்ட குரை கழல் கூத்தனை
கொம்பு உலாம் பொழில் கோட்டியூர்க் கண்டு போய்
நம்பனைச் சென்று காண்டும்_நாவாயுளே (9)

**நம்மாழ்வார்**

**தூதர் மீளுமளவும் தனிமை பொறாத தலைவி தலைவன் நகரான திருநாவாய் செல்ல நினைத்தல் (திருநாவாய்)**

3634 அறுக்கும் வினையாயின ஆகத்து அவனை
நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு
வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
குறுக்கும் வகை உண்டுகொலோ கொடியேற்கே? (1)

3635 கொடி ஏர் இடைக் கோகனகத்தவள் கேள்வன்
வடி வேல் தடம் கண் மடப் பின்னை மணாளன்
நெடியான் உறை சோலைகள் சூழ் திருநாவாய்
அடியேன் அணுகப்பெறும் நாள் எவைகொலோ? (2)

3636 எவைகொல் அணுகப் பெறும் நாள் என்று எப்போதும்
கவையில் மனம் இன்றி கண்ணீர்கள் கலுழ்வன்
நவை இல் திருநாரணன் சேர் திருநாவாய்
அவையுள் புகலாவது ஓர் நாள் அறியேனே (3)

3637 நாளேல் அறியேன் எனக்கு உள்ளன நானும்
மீளா அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்
நீள் ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
வாள் ஏய் தடம் கண் மடப் பின்னை மணாளா (4)

# 76. THIRUNAVAI



**BARATHA PUZHA RIVER**

3638 மணாளன் மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்
கண்ணாளன் உலகத்து உயிர் தேவர்கட்கு எல்லாம்
விண்ணாளன் விரும்பி உறையும் திருநாவாய்
கண் ஆரக் களிக்கின்றது இங்கு என்றுகொல் கண்டே? (5)

3639 கண்டே களிக்கின்றது இங்கு என்றுகொல் கண்கள்
தொண்டே உனக்காய் ஒழிந்தேன் துரிசு இன்றி
வண்டு ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
கொண்டே உறைகின்ற எம் கோவலர் கோவே? (6)

3640 கோ ஆகிய மா வலியை நிலம் கொண்டாய்
தேவாசுரம் செற்றவனே திருமாலே
நாவாய் உறைகின்ற என் நாரண நம்பீ
ஆஆ அடியான் இவன் என்று அருளாயே (7)

3641 அருளாது ஒழிவாய் அருள் செய்து அடியேனைப்
பொருளாக்கி உன் பொன் அடிக் கீழ்ப் புக வைப்பாய்
மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும்
தெருளே தரு தென் திருநாவாய் என் தேவே (8)

3642 தேவர் முனிவர்க்கு என்றும் காண்டற்கு அரியன்
மூவர் முதல்வன் ஒரு மூவுலகு ஆளி
தேவன் விரும்பி உறையும் திருநாவாய்

# 76. THIRUNAVAI

யாவர் அணுகப் பெறுவார் இனி? அந்தோ (9)

3643 அந்தோ அணுகப் பெறும் நாள் என்று எப்போதும்
சிந்தை கலங்கித் திருமால் என்று அழைப்பன்
கொந்து ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
வந்தே உறைகின்ற எம் மா மணி வண்ணா. (10)

3644 வண்ணம் மணி மாட நல் நாவாய் உள்ளானைத்
திண்ணம் மதிள் தென் குருகூர்ச் சடகோபன்
பண் ஆர் தமிழ் ஆயிரத்து இப் பத்தும் வல்லார்
மண் ஆண்டு மணம் கமழ்வர் மல்லிகையே (11)

**Festivals :** Vaikuntha Ekadasi, Thiruvonam.

**Temple Timings:** 5.00 am to 11.00 am
5.00 pm to 7.30 pm

**Address :** Arulmigu NavaiMukundhan Thirukkoil,
Thirunavai - 676301,
Malappuram District.
Kerala State

**Location :** Palakkad to Pattambi – 100 kms.
Pattambi to Thirunavai ( via Kuttipuram )

This sthalam is situated 1 mile away from Edakkulam railway station in Kerala. We can also reach this place by traveling through bus from Shoraanoor to Kuttipuram. This sthalam is a small village and as such, there is no proper lodging facility available. This sthalam is on the shore of Bharathappuzhi river which is 1 mile away from Edakkulam along the south direction.

**Phone :** 0494 – 2602157

**Nearest Railway Station:** Kuttipuram, Palakkad, Nilambur

**Nearest Airport:** Calicut

**Hotels :** Plenty of good hotels in Palakkad and Calicut

Courtesy : Sri Seshadri Swamy
Dr.V.Satagopan Swamy
www.pbase/svami
Dinamalar